22nd November 1963]

கொடுக்கப்பட்டிருக்கிறது. காலதாமதம் ஆவதாக இருந்தால் கிட்டத்தட்ட 1,000 கிராமங்களுக்கு ஆறு மாதத்திற்குள்ளாக இந்த வசதி செய்து இருக்க முடியாது. கனம் அங்கத்தினர் சொல்கிற இடத்தில் காலதாமதம் ஆகிறது என்றால், ப்ரயாரிடி பிரகாரம் தான் அந்த வேலைகளை செய்து வருகிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர்: டிரான்ஸ்பார்மர் வெளிநாடு களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறதா? அல்லது நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகிறதா? வெளிநாடு களில் இருந்து தான் இறக்குமதி செய்யப்படுகிறது என்றால் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வழிவகைகள் மேற்கொள் ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போது நான் கைந்து டிரான்ஸ்பார்மர் பாக்டரிகள் நம் ராஜ்யத்திலேயே இருக்கின்றன.

* 443 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to constitute Local Advisory Committees for the Electricity Board for each district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: பொதுமக்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லிக்கொள்வதற்கு மாவட்ட ரீதியில் மின்சாரக் கமிட்டி என்று ஏற்படுத்தினால் பொதுமக்களுக்கு மிகவும் சௌகர்யமாக இருக்கும் என்று தோன்றுவதனால் அரசாங்கம் அதை அமைக்க ஆலோசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மின்சார பட்ஜெட் விவாதத்தின் போது இதே கேள்விக்கு நான் பதில் சொல்லி யிருக்கிறேன். அதே பதிலைத்தான் இப்போதும் சொல்ல விரும்புகிறேன். இப்போது ஜில்லாக்களில் டெவலெப்மெண்டு கவுன்சில் இருக்கிறது. மின்சாரம் சம்பந்தமாகவும் அதில் பிரச்சனைகளை விவாதிக்க இடம் இருக்கிறது. ஆகவே தனி யாகக் குழு தேவையில்லை.

* 444 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether any monetary help is given to the families of the employees of the Electricity Department who meet with accidents and die during the discharge of their duties?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: 1962 ஆம் ஆண்டில் எத்தனை குடும்பங்களுக்கு இந்தமாதிரி பண உதவி செய்யப் பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.